
# திராவிடத்தால் வாழ்கிறோம்

824

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## நீரவ் மோடியைக் காக்கிறதா அமலாக்கத்துறை?

பஞ்சாப் நேஷனல் வங்கியில் ரூ.13,850 கோடி கடன்பெற்று மோசடி செய்த வைர வியாபாரிகள் மெகுல் சோக்சி மற்றும் அவரது உறவினர் நீரவ் மோடி. இந்தியாவில் இருந்து தப்பிச் சென்ற இவர்களை, நாடு கடத்தி, இந்தியாவுக்கு அழைத்து வந்து விசாரிக்க வேண்டுமென 5 ஆண்டுகளாக எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால், நீரவ் மோடியை நாட்டுக்குக் கொண்டுவர நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு ஆக்கப்பூர்வமான முயற்சிகள் எதையும் எடுக்கவில்லை.

இந்நிலையில், அமலாக்கத்துறை அலுவலகத்தில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில், இருவர் தொடர்பான ஆவணங்களும் எரிந்துவிட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. மும்பை, பல்லர்டு எஸ்டேட் பகுதியில் உள்ள கைசர்-ஐ-ஹிந்த் கட்டடத்தின் 4-வது மாடியில் அமலாக்கத்துறை அலுவலகம் உள்ளது. ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் திடீரென தீப்பிடித்து, அலுவலகம் முழுவதும் கொழுந்துவிட்டு எரிந்த பிறகே, காவலாளிகள் கவனித்ததாகக் கூறுகின்றனர்.

முக்கிய ஆவணங்கள், கணினிகள், கோப்புகள் எரிந்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது. குறிப்பாக, நீரவ் மோடி, மெகுல் சோக்சி, சகன் புஜ்பல், அனில் தேஷ்முக் ஆகியோர் தொடர்புடைய ஆவணங்கள் இந்தத் தீ விபத்தில் தீக்கிரையானதாக தகவல் வெளியாகியுள்ளது. இதில் சகன் புஜ்பல் தற்போது ஏக்நாத் ஷிண்டே அணியில் உள்ளார். தீ விபத்துக்கான காரணம் குறித்து இதுவரை தெரிவிக்கப்படாததும், யாரும் இல்லாத வேளையில் நள்ளிரவில் தீப்பற்றியது எப்படி என்பதும் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன.

தீ விபத்து தொடர்பாக, அரசியல் தலைவர்களும் சந்தேகங்களை எழுப்பியுள்ளனர். குறிப்பாக சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ், ‘உண்மை ஆதாரங்களை அழித்து சாம்பலாக்குவதுதான் பா.ஜ.க.வின் யாகம்’ என கடுமையாகச் சாடியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### இளைஞர் அணிச் செயலாளராக ஈரோட்டுக்கு வந்த தளபதி!



மு.சுப்பிரமணியம்

1986-ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கழக நிகழ்வில் பங்கேற்க, ஈரோடு வருகை தந்தார். அப்போது ஒன்றுபட்ட ஈரோடு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளராகப் பணியாற்றிய அண்ணன் எவரெஸ்ட் மு.கணேசன் அவர்களின், அலுவலகத்திற்கு வருகை தந்த வேளையில், தளபதி அவர்களோடு நிழற்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு அமைந்தது. அன்று தளபதியுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம், என் வாழ்நாளில் மறக்கமுடியாத நினைவாக இன்றும் நிலைத்து நிற்கிறது.

– மு.சுப்பிரமணியம்,
51-வது வட்ட பாக முகவர். ஈரோடு மாநகர்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு

### சாப்பிடும் இடத்துக்குப் போராட்டம்!

1940-களில் தென்னிந்தியாவில், எஸ்.ஐ.ஆர். மற்றும் எம்.எஸ்.எம். என்னும் ரயில்வே தனியார் நிறுவனங்கள் இயங்கி வந்தன. இந்த ரயில்வே சிற்றுண்டிச் சாலைகளில் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனர் அல்லாதவர்களுக்கும், தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டு இருந்தன. இதனை கடுமையாக எதிர்த்துப் போராடியது சுயமரியாதை இயக்கம். ‘இந்திய கவர்மென்ட்டார் கவனிப்பீர்களா?’ எனத் தலைப்பிட்டு, இது குறித்து தலையங்கம் எழுதியது ‘விடுதலை’.

---

தமிழ்.கா.அமுதரசன்

2

### கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்!

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வகுப்புவாரி இட ஒதுக்கீட்டுக்காக திருத்த வேண்டும் என முதன்முதலில் குரல் கொடுத்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அது இந்திய ஜனநாயகத்தை செழுமைப்படுத்துவதற்கான, கழகத்தின் முதல் முயற்சி. 1951-ஆம் ஆண்டில் தொடங்கிய அந்தப் போராட்டம், சமகாலத்தில் இந்திய ஜனநாயகத்தை, அரசியலமைப்புச் சட்டத்தைக் காப்பாற்றுவதற்காகவும் தொடர்வதன் சாட்சிதான் ஆளுநருக்கு எதிராக, தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில், 10 மசோதாக்களுக்கு உச்சநீதிமன்றமே அளித்த ஒப்புதல்.

ஒன்றிய அரசின் எதேச்சதிகாரப் போக்கை, ஒரு மாநிலம் கட்டுப்படுத்துகிறது என்றால், அது தமிழ்நாடுதான். அதுவும் தி.மு.கழக ஆட்சிகளின்போது, ஒன்றிய அரசு அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறவே முடியாது என்கிற நிலைமையை உருவாக்கியிருக்கிறோம். சட்டப் போராட்டங்கள்வழிதான் அவற்றை நிகழ்த்தி இருக்கிறோம்.

நம் திராவிட மாடல் அரசு அமைந்த பின்னர், தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பும் பல சட்ட மசோதாக்களுக்கு, தமிழ்நாடு ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்துவதும், அவற்றை குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல், திருப்பி அனுப்புவதும் தொடர்கதையாக இருந்தது. இதையடுத்து, ஆளுநர் அதிகாரத்தை வரையறுக்க வேண்டும், அரசு அனுப்பும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கு காலக்கெடு நிர்ணயிக்க வேண்டும் என துணிச்சலுடன் உச்ச நீதி மன்றத்தின் கதவுகளைத் தட்டியது நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு.

#### வழக்கு விவரம்

2022-ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு) (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.48/2022) 19 அக்டோபர் 2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. இவ்வாறு 12 சட்டத்திருத்த மசோதாக்களை அரசு நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியது.

இந்த சட்ட முன்வடிவிற்கு 13 நவம்பர் 2023 அன்றுவரை ஆளுநர் ஒப்புதல் அளிக்க வில்லை. இதையடுத்து, மீண்டும் 18.11.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தீர்மானம் முன்மொழியப்பட்டு, அதே தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அதாவது பல்கலைக்கழகத் துணைவேந்தர்களை அரசே நியமிக்கும் சட்டமுன்வடிவு மறுபரிசீலனை செய்யப்பட்டு, எந்தவித மாறுதலுமின்றி சட்டப்பேரவையில் மீண்டும் நிறைவேற்றப்பட்டது.

அந்த மசோதா 18.11.2023 அன்று ஆளுநர் மாளிகைக்கு மீண்டும் அனுப்பப்பட்டது. அப்படி மீண்டும் அனுப்பிய மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்திருக்க வேண்டும். இது தொடர்பாக அரசு வலியுறுத்தியும், முதலமைச்சர் நேரில் சென்று ஒப்புதல் அளிக்குமாறு வலியுறுத்தியும் ஆளுநர் தரப்பில் இருந்து எந்தப் பதிலும் அளிக்கப்படவில்லை.

சட்டமன்றத்தில் இரண்டாவது முறையாக நிறைவேற்றிய அந்த மசோதாக்கள் நிராகரிக்கப் பட்டதா, கிடப்பில் வைக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய முடியாத நிலையில், ‘நான் நிறுத்தி வைத்தால் அது நிராகரிக்கப்பட்டதாகவே பொருள்’ என பொதுவெளியில் கருத்து தெரிவித்தார் ஆளுநர் ஆர்.என்.ரவி.

ஆளுநரின் போக்கு மாநில சட்டமன்றத்தின் அதிகாரத்தை மீறிய செயல் என்பதால், உச்சநீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டியது கழக அரசு. இந்த வழக்கினை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் பர்திவாலா, மகாதேவன் அடங்கிய அமர்வு, ஏப்ரல் 8, 2025 அன்று அளித்த தீர்ப்பில் 10 மசோதாக்களுக்கும் தாங்களே ஒப்புதல் அளிப்பதாக வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பினை அளித்தனர்.



ஓவியம் : ரவி பேலட்

415 பக்கங்கள் கொண்ட தீர்ப்பில், 10 சட்ட மசோதாக் களுக்கு அங்கீகாரம் அளித்தது ஏன் என நீதிபதிகள் விளக்கம் அளித்துள்ளனர். ‘‘மேற்கூறிய சட்ட முன்வடிவை குடியரசுத் தலைவருக்குப் பரிசீல னைக்கு அனுப்பிய பின்னர், குடியரசுத் தலைவர் எடுத்திருக்கக் கூடிய அனைத்து நடவடிக்கைகளும் சட்டத்தின்படி இல்லை என்றும், மேற்கூறிய சட்ட முன்வடிவு சட்ட மன்றத்தில் மறுபரிசீலனை செய்யப்பட்டு ஒப்புதலுக்காக ஆளுநருக்கு மீண்டும் அனுப்பப்பட்ட நாளில், அவரால் ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்’ என்று ஆணையிட்டது. அதாவது 10 மசோதாக்களும் தமிழ்நாடு ஆளுநரால் 18 நவம்பர் 2023 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்ட தாக கருதப்படுதல் வேண்டும்” எனத் தீர்ப்பில் குறிப்பிட்டனர்.

#### வழிகாட்டிய தீர்ப்பு

முக்கியமாக உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு ஒட்டுமொத்தமாக இந்தியாவில் இருக்கும் அனைத்து மாநில ஆளுநர்களுக்குமான வழிகாட்டுதலாக அமைந்தது. குறிப்பாக, மாநில மக்கள் தங்களின் பிரதிநிதிகள் உருவாக்கும் சட்டத்தை அமல்படுத்த வேண்டியதுதான் ஆளுநர்களின் பொறுப்பு என்பதை அழுத்தமாகச் சொன்னது. அதன் மூலம் மாநில சட்டமன்றத்துக்கே அதிகபட்ச அதிகாரம் என்பதைத் தெளிவுபடுத்தி இருக்கிறது.

“ஆளுநரின் பணி அமைதியை நிலை நாட்டுவது; ஆனால், இங்கே அதற்கு எதிர்மாறாக உள்ளது” என்றும் நீதிபதி பர்திவாலா தனது தீர்ப்பினை வாசிக்கையில் குறிப்பிட்டார்.

> “தி.மு.கழக அரசு வழக்கு தொடுத்த நோக்கமும் அதுதான். அரசியலமைப்பு எல்லோருக்குமானது. அதை சிதைப்பவர்களை அனுமதிக்கக்கூடாது.”

“குடியரசுத் தலைவருக்கு இருப்பதுபோல, மசோதாக்களைக் கிடப்பில் வைத்திருப்பது அல்லது, நிராகரிப்பது என்கிற வீட்டோ அதிகாரம் ஆளுநருக்கு இல்லை. அவருக்கு மூன்று வாய்ப்புகள்தான். ஒன்று ஒப்புதல் அளிக்கலாம். இரண்டாவது திருப்பி அனுப்பலாம். மூன்றாவதாக குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம். அதிலும் மாநில சட்டப் பேரவையில் மீண்டும் திருத்தங்கள் இன்றி, நிறைவேற்றப்பட்ட மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப முடியாது. ஒப்புதல் அளித்தே ஆகவேண்டும்’’ என மூன்று வாய்ப்புகளையும் தெளிவுபடுத்தி உள்ளது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பைப் பெறுவதற்காக வழக்காடிய உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞர்கள் ராகேஷ் திவேதி, எம்.பி.க்கள் அபிஷேக் சிங்வி, பி.வில்சன் ஆகியோருக்கு 27.04.2025 அன்று முதலமைச்சர் சிறப்பு விருந்து அளித்து மரியாதை செய்தார்.

மிக முக்கியமாக சட்டப்பிரிவு 200-இன் கீழ் ஆளுநருக்கு அனுப்பப்படும் மசோதாக் களுக்கு ஒப்புதல் அளிக்க எடுத்துக் கொள்ளப்படும் கால அளவு குறித்தும் உத்தரவிட்டனர். குறிப்பாக, குடியரசுத் தலைவருக்கும் காலக்கெடுவை நிர்ணயித்தது உச்ச நீதிமன்றம்.

‘ஒப்புதல் அளிக்கவோ, நிராகரிக்கவோ ஒரு மாதம் எடுத்துக் கொள்ளலாம். திருத்தம் மேற்கொள்ள திருப்பி அனுப்புவதாக இருந்தால், மூன்று மாதங்கள், குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதாக இருந்தால், மூன்று மாதங்கள்’ என காலக்கெடுவின்படி ஆளுநர் செயல்படாவிட்டால், மீண்டும் உச்சநீதிமன்றத்தை நாடலாம் என்றும் உத்தரவிட்டனர்.

இறுதியாக நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், அம்பேத்கர் கூற்றை மேற்கோள்காட்டினர்.

“அரசியலமைப்புச் சட்டமானது நல்லதாகவே இருக்கலாம். ஆனால், அதனை நிறைவேற்றுபவர்கள் நல்லவர்களாக இல்லாவிட்டால், சட்டமும் தவறாக இருப்பதாகவே எடுத்துக் கொள்ளப்படும்” என தீர்ப்பில் குறிப்பிட்டனர். தி.மு.கழக அரசு வழக்கு தொடுத்த நோக்கமும் அதுதான். அரசியலமைப்பு எல்லோருக்குமானது. அதை சிதைப்பவர்களை அனுமதிக்கக்கூடாது.

...தொடரும்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131